**Kalanjiyam - International Journal of Tamil Studies**
Volume: 5 | Special Issue | December 2024 | eISSN: **2456-5148**

‘ களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

# தமிழ் மொழி வரலாறும் சிறப்பும்

## History and importance of the Tamil language

**ந. சுசீலா**
***அரசு மாதிரி மகளிர் மேல்நிலை பள்ளி , விழுப்புரம் .605602***
*neem92@gmail.com*
**N. Susheela**
***Government Model Girls Higher Secondary, School, Villupuram .605602***
***neem92@gmail.com***

**Abstract:**

Tamil is one of the major languages in the world. It is the mother tongue of many Tamil speakers. Tamil is also a classical language. Tamil is the most widely spoken language in India, Sri Lanka, Malaysia, and Singapore. According to the 1997 census, Tamil is the language spoken by 80 million (800 million) people worldwide. The purpose of this article is to briefly examine the unique features of the Tamil language.

**Keywords**

Tamil, Tamil Language, History of Tamil Language

**முன்னுரை** :

உலகில் உள்ள முதன்மையான மொழிகளில் ஒன்று தமிழ் மொழியாகும். தமிழ் பேசும் பலரின் தாய் மொழி ஆகும். தமிழ் மொழி செம்மொழியும் ஆகும். தமிழ் மொழி இந்தியா ,இலங்கை,மலேசியா,சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அதிக அளவில் பேசப்படும் மொழியாகும்.1997 ஆம் ஆண்டுபுள்ளி விவரப்படி உலகம் முழுவதிலும் 8 கோடி (80 கோடி ) மக்களால் பேசப்படும் மொழி தமிழ் மொழியாகும். தமிழ் மொழியின் சீரிய சிறப்புகளை சிறுதுளியென ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பொருளுரை** :

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே தோன்றிய மொழி தமிழ் மொழியாகும். இந்த மொழியின் வளர்ச்சி அடுத்தடுத்த தத்துவங்கள், இலக்கியங்கள் மற்றும் கலைகளால் பூரிக்கப்படுகின்றது. தமிழ் மொழி என்பது இயல், இசை மற்றும் நாடகத்தில் திளைத்து வளர்ந்ததுடன், இது நமது உலகின் செம்மொழி என்ற பெருமையை அடைந்த மொழியாகும். தமிழின் வரலாறு மற்றும் பன்முகத்தன்மை, இந்நேரம் வாழும் கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் படைப்புகளில் தென்படுகிறது. தமிழின் மரபியல் மற்றும் தொல்கலை உப்பர் கவிஞர்கள் நமது மரபுகளை இன்னும் மக்களிடையே நிலைநாட்டியுள்ளார்கள். தமிழ் மொழியின் பிறப்பிடம் மனிதனும், தமிழும் பிறந்த குமரி கண்டமாகும், இது உலகின் மிக ஓர் அழகான மற்றும் பழமையான நிலமாகக் கருதப்படுகிறது.

குமரி கண்டம், அதன் வரலாற்று மற்றும் பண்டித வரலாறு மூலமாக, தமிழ் மொழியின் அடிப்படையை உருவாக்கியுள்ளது. இது தமிழ் உரை, சங்ககால இலக்கியங்கள் மற்றும் அதன் பாரம்பரியத்தை விளக்குகிறது. தமிழ் என்பது ஒரு உயிரும் உருக்கும் மொழியாகும்; இது தற்போது உலகின் பல பகுதிகளில் நிறைந்த தமிழ்ப் பார்சல் மற்றும் சமுதாயங்களாலும் பேசப்படுகிறது. தமிழின் இதழ்கள், புத்தகங்கள், சினிமா, மற்றும் நாடகங்கள் மூலம் அதன் திறனை ஊக்குவித்து வருகிறோம்.

தமிழ் மொழியின் அழகு, அதன் பண்பான இலக்கியம் மற்றும் அதன் வரலாற்று உற்றுப் பாய்ந்த சிந்தனைகள், அனைவருக்கும் உரியவை என்பதே இந்த மொழியின் உண்மையான செம்மொழி அடையாளமாகும். இதன் வளம் மற்றும் ஸ்திரத்தன்மை, உலக மொழிகளுக்கு இந்த மொழி எப்போது இருந்து உயிரே உருவானது என்பதற்கான சாட்சியாகும். Tamil is not just a language; it is a celebrated culture and identity that continues to thrive in the hearts of millions.

.

**தமிழ்மொழி சிறப்பு**

பழமைக்கும் பழமையாய்
இலக்கிய வளமுடையதாய்
புதுமைக்கு புதுமையாய்
கருத்துசெல்வம் நிறைந்ததாய்
பொலிவுடன் விளங்குவது - நமது தமிழ் மொழியாகும்.
உலகிலேயே மொழி என முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்டது தமிழ்ச் சங்கமே .
தமிழன் என்றொரு இனம் உண்டு
தனியே அவருக்கு ஒரு குணம் உண்டு
அமிழ்தம் அவனது மொழியாகும்
அன்பே அவனது வழியாகும் ----நாமக்கல் கவிஞர்
அமிழ்து அமிழ்து அமிழ்து என்று உரைக்கின்
அது தமிழ் தமிழ் என்றாகும். ஆம் அமிழ்து வேறு
தமிழ் வேறல்ல என்கிறார் நாமக்கல் கவிஞர்.

**தமிழ் மொழிககே மேலும் சிறப்பு சேர்ப்பது சிறப்பு ழகரம்** ;

‘குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்
மழலை சொல் கேளாதவர் ‘ - திருவள்ளுவர்.

இவற்றை விட இனியது அந்த இனியவைகளுக்கு எல்லாம் இனிமை சேர்க்கும் சிறப்பு ழகரம். கேட்பதற்கே ஒரு கிளர்ச்சி ஊட்டும் எழுத்து ‘ழ ‘ அந்த சிறப்பு ழகரம் தமிழை சிறப்பான தனித்துவமான ஒரு மொழியாக காட்டுகிறது.

மற்ற மொழிகளுக்கு இல்லாத ஒரு சிறப்பு தமிழுக்கு உண்டு. அது சிறப்பு எழுத்து ழகரம் நாக்கை மடித்து, உள் நாக்கை அழுத்தி தொண்டையிலிருந்து உச்சரிக்க வேண்டிய எழுத்து ழகரம். இதில் என்ன சிறப்பு என்றால் இந்த ழ கரத்தை நாம் உச்சரிக்கின்ற போது மூளையில் உள்ள பீனியல் சுரப்பியானது தூண்டப்படுவதால், மனதில் உற்சாகம் பிறக்கிறது.

இதை உணர்ந்துதான் நமது முன்னோர்கள் தமிழின் முக்கியமான வார்த்தைகள் எல்லாம் ‘ழ`கர சொற்களாக வருமாறு படைத்திருக்கிறார்கள்.

எ. கா வாழ்க்கை, தொழில், தமிழ், மழை, அழகு, விழா, உழவு, மொழி, வாழ்த்து

வாழ்க்கைக்கு தேவையான மிக முக்கியமான பண்பான ஒழுக்கம்,உலகம் வாழ தேவையான உணவினை தருகின்ற தொழிலான உழவு, போன்ற முக்கிய சொற்களை ழகரத்தில் அமைத்ததை பார்க்கும் போது தமிழர்களின் சிந்தனையும் ,வாழ்வியலும் எவ்வளவு தூரம் ஓங்கி வளர்ந்துள்ளது என்பதை உணர முடிகிறது.

**சிறப்பு ழகரம் சேர்ந்த மொழியும் சிறப்பானது**

இன்பத்தமிழ் எங்கள் அசதிக்கு சுடர்

தந்த தேன் - **பாரதிதாசன்**

பாரதியோ சொல்லில் உயர்வு தமிழ் சொல்லே என்கிறார்.

தே மதுர தமிழோசை என்று மற்றொரு

இடத்தில் சொல்கிறார்.

**வீறுடைய செம்மொழி தமிழ் மொழி உலகம் வேரூன்றிய நாள்**

**முதல் உயிர் மொழி** - என்கிறார் பெருஞ்சித்திரனார்.

தமிழ் என்னும் சொல் ;சம்பை தமிழ் பிராமி கல்வெட்டு விழுப்புரம் மாவட்டத்தில் திருக்கோவிலூருக்கு அருகே உள்ளது. இது தமிழ் சங்க காலத்தை சேர்ந்தது (400 பி.சி.இ). தமிழை உலக மொழிகளில் ஒன்றாக கொண்டு மொழியியல் கண்டு நோக்குவது நலம்.

**தமிழியல்** : தமிழின் இயல்பினை தொல்காப்பியம் நமக்கு புலப்படுத்துகிறது.

அவை இன்றைய மொழியியலாளரின் எண்ண ஓட்டத்தை பெருமளவில் ஒத்துள்ளது. சொல்வளம் நிறைந்த மொழி தமிழ் மொழியாகும். நவீன தமிழ் மொழி ,பழந்தமிழ் மொழியில் பயன்படுத்தப்பட்ட பெரும்பாலான சொற்களை இன்னும் பயன்படுத்துகின்றது,

தமிழ் தாத்தா உ. வே. சா, பரீதிமாற் கலைஞர், முனைவர் கார்டுவெல் மறைமலையடிகள், மொழி ஞாயிறு, தேவநேய பாவாணர் முதலான அறிஞர்களின் ஈடுபாட்டின் காரணமாகவே இன்று தமிழ் மொழி தொடர்ந்து உயிர் பெற்று இயங்குவதை எக்காலத்திலும் மறக்கக்கூடாது.



KALANJIYAM

**முடிவுரை** : தமிழ் மொழி உலகிலேயே மிக சிறந்த மொழி. மூன்று சங்கங்கள் அமைத்து மொழி வளர்த்த பெருமை தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு. தொன்மை தமிழ் மொழி,இலக்கிய வளமும் இலக்கண நுட்பமும் கொண்ட மொழியாக திகழ்ந்து வருகிறது. இன்று பல பரிணாமங்களை கடந்து காலத்தை வென்று நிற்கிறது.இம்மொழியின் சிறப்பை என்ன வென்று கூறுவது.

தாய் வாழ்க !

தாய் தந்த தமிழ் வாழ்க !

**இணைப்புகள்** :

1. மொழியின்றி மனிதரில்லை.
2. Official language of Tamil Nadu Government archived from the original, 1 may 2007
3. Summary by language size.
4. R. Natarajan 1977 - The language of Sangam Literature and Tholkappiyam – Madurai publishing house.
5. தமிழ் செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டது 12-10-2021.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.